மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 10/22
வா.சா.3

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ஹரிஸ்கேசவன் | தேதி : 23.03.26 |
| வயது : | த/பெ : தனசேகர் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**23.03.26 குறுக்கு விசாரணை**

1.வழக்கு சொத்து என் அப்பாவுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தாவுக்கு சொந்தமானது ஆகும். என் தாத்தாவுக்கு எப்படி சொந்தம் என்றால் சுப்பையா நாடாரிடம் இருந்து 1956 ல் கிரையம் வாங்கியதன் அடிப்படையில் பாத்தியம். சுப்பையா நாடாருக்கு எப்படி பாத்தியம் என்பதற்கு மூல ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சுப்பையா நாடாருக்கு அவரது அப்பாவிடம் இருந்து வழக்கு சொத்து கிடைத்தது.

2.சுப்பையா நாடாருக்கு 8.5 செண்ட் தனிப்பட்ட முறையில் பாத்தியம் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1956 ம் வருட கிரைய ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன். அந்த கிரைய ஆவணத்தில் 4 பக்கம் எல்கைமால்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். 1956 ம் ஆண்டு ஆவணத்தில் தெற்கில் அன்னகிளி அம்மாள் இடமும், கிழக்கில் யோவான் இடமும், வடக்கில் தங்கையாநாடார் இடமும், மேற்கில் காசி நாடார் இடமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.வா.சா.ஆ 2 கணிணி பட்டா கூட்டு பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ல் பிரதிவாதியின் கணவர் பெயரான ஜெபகுமார் ராஜசிங் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். 1956 ம் ஆண்டு என் தாத்தா கிரையம் வாங்கிய

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.23 18:37:06 +0530

சொத்து கூட்டு பட்டாவில் தான் இன்று வரை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் 30/2 என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 51 செண்ட் ஆகும். அதில் பிரதிவாதி குடும்பத்திற்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

4.சர்வே எண் 30/2 க்கான ஆதியில் வருவாய் துறை ஆவணங்களில் யோசேப்பு நாடார், சுந்தர ஆழ்வார் நாடார், பிரமுத்து நாடார், பொன்னையா என்ற சுப்பையா நாடார், சண்முக நாடார், கருத்தையா நாடார், சிவன் ஆறுமுக நாடார், ஜெபரத்தினம் பொன்ராணி ஆகியோர் பெயரில் இருந்தன என்றால் சரியல்ல. முந்தைய பட்டாவில் மேற்படி 8 நபர்களின் பெயர் இருந்ததை இல்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5.பிரதிவாதியின் மூதாதையர் யோசேப்பு நாடார் என்றால் எனக்கு தெரியாது. யோசேப்பு நாடாரின் வாரிசுகள் ஆனந்த செல்வராஜ், எட்வின் ஜெயராஜ், ஆப்பிரகாம் தாமஸ், ஆர்தர் சௌந்திரராஜ் என்ற 4 ஆண் மக்கள், கனகசுகீர்தா, வைனஸ் எப்சிபாய் என்ற 2 பெண்மக்களும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வாரிசுகள் குறித்து என் தாயாரை விசாரித்தால் அவருக்கு தெரியும் என்றால் சரியல்ல.

6.யோசேப்பு நாடாருக்கு சர்வே எண் 30/2ல் 12.5 செண்ட் 1929ம் ஆண்டு கிரைய ஆவணம் மற்றும் அனுபவத்தின் படி பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. யோசேப்பு நாடாரின் இறப்பிற்கு பின்பு அவரது 4 ஆண் வாரிசுகள் சர்வே எண் 30/2 ல் 12.5 செண்ட் சொத்தினை அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் யோசேப்பு நாடாரின் பெண்மக்கள் 29.12.1981ல் சர்வே எண் 30/2 ல் அவர்களது 2 பாகங்களை பாகப்பாத்திய விடுதலை செய்து கொடுத்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது உண்மையல்ல.

7.23.02.1982ல் யோசேப்பின் வாரிசுகளான ஆர்தர் சௌந்திரராஜ், ஆபிரகாம் தாமஸ் ஆகியோர் அவர்களது 2 பாகங்களை பிரதிவாதியின் மாமனார்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:37:11 +0530

ஆனந்த் செல்வராஜ்க்கு பாகப்பாத்திய விடுதலை ஆவணம் செய்து கொடுத்துவிட்டனர் என்றால் அது உண்மையல்ல. 23.09.1998 ல் யோசேப்பின் மற்றொரு வாரிசான எட்வின் ஜெயராஜ் அவரது ஒரு பாகத்தினை பிரதிவாதியின் மாமனாருக்கு பாகப்பாத்திய விடுதலை ஆவணம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது உண்மையல்ல.

8.மேற்படி 2 ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதியின் மாமனார் சர்வே எண் 30/2 ல் 12.5 செண்டினை பாத்தியம் அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மாமனாரின் இறப்பிற்கு பிறகு 2007 ல் அவரது குடும்பத்தில் நடைபெற்ற வாய்மொழி பாகப்பிரிவினையில் மேற்படி 12.5 செண்டினை பிரதிவாதியின் கணவர் அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் வா.சா.ஆ 2 கூட்டுபட்டாவில் பிரதிவாதியின் மாமனார் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9.பிரதிவாதியின் கணவரை தெரியுமா என்றால் தெரியாது. 22.10.2019 ல் சர்வே எண் 30/2 ல் 12.5 செண்டில் 9.328 செண்டினை பிரதிவாதியின் கணவர் பிரதிவாதிக்கு செட்டில் மெண்ட் செய்து கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 27.11.2019 ல் பிரதிவாதிக்கு அவரது கணவர் சீர்திருத்த ஆவணம் எழுதிக்கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் அது உண்மையல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிக்கு வருவாய் துறையில் உட்பிரிவு செய்து பட்டா வழங்கியுள்ள விபரம் தெரியுமா என்றால் அது உண்மையல்ல.

10.உட்பிரிவு செய்து கொடுக்கும்போது நிலஅளவையர் அளவீடு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்கள் 30/2D2, 30/2E, 30/2F ஆகியவற்றிற்கு பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்கள் 30/2D2, 30/2E, 30/2F க்கும், எங்கள் குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி சென்னையில் தான் உள்ளார் என்றால் கோயம்புத்துாரில் உள்ளார். பிரதிவாதி வெளியூரில் உள்ளதை சாதகமாக எடுத்து

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.23 18:37:14 +0530

கொண்டு நான், என் உறவினர் செல்வஜோதி மற்றும் மற்ற வாதிகள் பிரதிவாதியின் சொத்தினை ஆக்கிரமிக்க முயற்சித்தோம் என்றால் சரியல்ல.

11.மேற்படி விபரம் அறிந்து பிரதிவாதி ஊருக்கு வந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை தடுத்து நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 02.10.2021ல் செல்வஜோதி தபசில் சொத்தில் ஒரு பகுதியினை ஆக்கிரமிக்க முயற்சித்தற்கு எதிராக பிரதிவாதியின் கணவர் ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. விசாரணையில் செல்வஜோதியினை காவல் துறையினர் எச்சரித்து அனுப்பினர் என்றால் எனக்கு தெரியாது. 1956ம் ஆண்டு என் தாத்தா கிரையம் வாங்கியதில் இருந்து சர்வே எண்30/2 உட்பிரிவு செய்ய நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

12.பிரதிவாதியின் இடம் வேறு, 1956ம் ஆண்டு என் தாத்தா கிரையம் வாங்கிய இடம் வேறு என்றால் சரியல்ல. வழக்குரையில் பிரதிவாதியின் ஏற்பாடு ஆவணத்தில் கண்ட சொத்தின் எல்கைமாலை காண்பித்து மோசடியாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 02.10.2021ம் தேதிய நடந்ததாக கூறும் சம்பவத்திற்கு காவல் துறையில் புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் ஹாலோபிளாக் கட்டுமானம் கட்டி பூட்டு போட்டுள்ளதால் தான் காவல் நிலையத்தில் எந்த புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஊர் பெரியவர்களிடம் சொல்லி பேசிப் பார்த்தோம். அதன்பிறகு வழக்கு போட்டுள்ளோம்.

13.ஊர் பெரியவர்களிடம் சொல்லி பேசியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1956ம் ஆண்டு ஆவணத்தில் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 2 கணிணி பட்டாவில் 2021ல் தான் எங்களது பெயரை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. வாரிசு அடிப்படையில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. பட்டாவில் பெயர் சேர்க்கப்பட்ட வருடம் ஞாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எங்களது 8.5 செண்ட் இடத்தினை குறிக்கும் வகையில் வரைபடம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:37:18 +0530

14.சர்வே எண்கள் 30/2D2, 30/2E, 30/2F சம்பந்தமாக எங்களுக்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீது சர்வே எண் 30/2 க்குரியது என்றால் சரிதான். பிரதிவாதி கேட் போட்டுள்ள இடத்தில் கீழே 5 முதல் 6 அடி பள்ளம் என்றால் சரியல்ல. அந்த கேட் போட்டுள்ள இடத்தின் வழியாக பிரதிவாதியின் இடத்திற்கு போகமுடியாது என்றால் சரியல்ல.

15.பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கேட் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் கேட்டுள்ள செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் இடத்தை அபரிப்பதற்காக பொய்யான எல்கைமால் குறிப்பிட்டு தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.23 18:37:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.